## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**RLTOP எண்.5/2022**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22ம் நாள் வெள்ளிக் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | பழனிவேல் | **தொழில் :** | பணி ஓய்வு பெற்றவர் |
| **தந்தை பெயர் :** | ரெங்கசாமி | **சமயம் :** | – |
| **ஊர் :** | புலவஞ்சி | **வயது** | 72 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**22.08.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் மனுதாரரின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். மனுதாரர் என் மனைவி பூவழகியின் உடன்பிறந்த தங்கை. நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 01.12.2019 ல் எதிர்மனுதாரருக்கும் நெடுஞ்செழியன் இடயே ஏற்பட்ட வாடகை ஒப்பந்த பத்திரம் அசல் **ம.த.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 23.01.2013 ல் நெடுஞ்செழியன் பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் நகல் **ம.த.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன். நெடுஞ்செழியன் இறப்பு சான்றிதழ் நகல் **ம.த.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். நெடுஞ்செழியன் கணினி வாரிசு சான்றிதழ் **ம.த.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். நெடுஞ்செழியன் வழக்கறிஞர் மூலமாக எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **ம.த.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன். மேற்படி அறிவிப்னை

எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் **ம.த.சா.ஆ.6** ஆக குறியிடுகிறேன்.11.12.2020 ல் எதிர்மனுதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் **ம.த.சா.ஆ.7** ஆக குறியிடுகிறேன். 07.07.2022 ல் மனுதாரர் எதிர்மனுதாரர் பெயரில் பட்டுக்கோட்டை காவல் துணைக்கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் நகல் **ம.த.சா.ஆ.8** ஆக குறியிடுகிறேன். பவர் பத்திரம் அசல் **ம.த.சா.ஆ.9** ஆக குறியிடுகிறேன். மனுப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.